விலை: 50.00
பக்கங்கள் : 12

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 285 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 13 வெள்ளிக்கிழமை (30.09.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## இலங்கைக்கான ஒத்துழைப்பு மேலும் அதிகரிக்கப்படும்

### இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே



(கொழும்பு)

இலங்கைக்கான ஒத்துழைப்பு மேலும் அதிகரிக்கப்படும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

கல்வி மற்றும் திறன் பயிற்சிகளில் இந்தியாவும் இலங்கையும் ஒத்துழைப்பை அதிகரிக்க உள்ளதாக கோபால் பாக்லே தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின்போது இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இதனைக் குறிப்பிட்டுள்ளார். ➤ 11

## உலகம் முன்னோக்கி நகர்கிறது அரசு அசையாமல் நிற்கிறது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

உலகம் முன்னோக்கிச் சென்றாலும் எமது நாடு ஓரிடத்தில் அசையாமல் நிறுத்தப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

வெல்லவாய தனமல்வில சபைக் கூட்டத்தில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியும், அரசாங்கமும் ஒரே இடத்தில் சுழன்று கொண்டிருக்க, உலகம் முன்னோக்கிச் செல்கிறதென அவர் தெரிவித்துள்ளார்.

நாடு ஓரிடத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் நாட்டின் எதிர்காலம் குறித்த புரிதல் அவர்களுக்கு இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். ➤ 11

## இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்த தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சில பொருட்களின் இறக்குமதித் தடையை அரசாங்கம் தளர்த்தவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கடந்த ஆகஸ்ட் 23 அன்று, அத்தியாவசியமற்ற பல பொருட்களின் இறக்குமதியை இடைநிறுத்தி வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது. ➤ 11

# பொருளாதாரம் உறுதிப்படுத்தப்படும்

## தேசிய சபையின் கன்னிக் கூட்டத்தில் தீர்மானம்



(கொழும்பு)

*பொருளாதாரத்தை உறுதிப்படுத்த 2 உப குழுக்கள் அமைக்கப்படும் என தேசிய சபையின் முதலாவது கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.*

தேசிய சபையின் முதலாவது கூட்டம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை ஆகியவற்றுக்காக இரண்டு உப குழுக்களை அமைப்பதற்கு இதன் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பதவிகள் அடிப்படையில் தேசிய சபையில் அங்கம் வகிக்கும், பிரதமர் தினேஸ் குணவர்தன, சபை முதல்வர் அமைச்சர் சுசில் ➤ 11

## வவுனியாவில் விபத்து வயோதிபர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா - தாலிக்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். நேற்றுப் பிற்பகல் மன்னார் வீதியூடாகச் சென்று கொண்டிருந்த வயோதிபரை அதே திசையில் பின்னால் வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த வயோதிபர் நோயாளர் காவுவண்டியின் மூலம் வவு ➤ 11

## கொடிகாமத்தில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை வடக்குப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு ➤ 11

## இலங்கைக்கு கடன் வழங்க அங்கீகாரம் கிடைக்கவில்லை

### சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு கடன் வழங்குவது தொடர்பில் தமது பணிப்பாளர் சபை எப்போது அங்கீகாரம் வழங்கும் என நிச்சயமாகக் கூற முடியாது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

எனினும், கடன் வழங்குநர்களுடனான, கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தையின் வெற்றியைப் பொறுத்து காலம் தீர்மானிக்கப்படும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதியொருவர் கூறினார். ➤ 11

## ஐரோப்பிய ஒன்றியம் 1.5 மில்லியன் நிதியுதவி

(கொழும்பு)

நாடு தற்போது முகங்கொடுத்திருக்கும் பாரிய சமூக பொருளாதார நெருக்கடியினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் ➤ 11

## பூகோள அரசியல் போக்குகள் பொருளாதார நெருக்கடியை மேலும் மோசமடைய செய்துள்ளது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

கோவிட் தொற்றுநோய் மற்றும் உக்ரேன் யுத்தம் காரணமாக ஏற்பட்ட உலகப் பொருளாதார ஸ்திரமின்மையின் பாதகமான விளைவுகள், உணவு, எரிபொருள் மற்றும் உரம் என்பவற்றின் விலைகள் அதிகரித்து, பாரிய சுமையாக மாறியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிர ➤ 11

## அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பில் போராட்டம்



(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியால் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள், நீண்ட நேர மின் வெட்டு மற்றும் மக்களின் சுமை தீர்க்குமாறு கோரி அரசாங்கத்திற்கு எதிராக ➤ 11

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் வங்குரோத்து நிலையை சர்வதேசத்துக்கு அறிவித்தமை முட்டாள்த்தனம்

## டி.யு.குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு வங்குரோத்து நிலை அடைந்து விட்டது. ஆகையால் பெற்றுக் கொண்ட அரசமுறை கடன்களை மீள செலுத்த முடியாது என அரசாங்கம் சர்வதேசத்துக்கு அறிவித்தமை முட்டாள்த்தன மானதொரு தீர்மானமாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்பதால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு அறிவிக்காமல் இருப்பது மிகப்பெரிய துரோகமாகும்என இலங்கை கம்யூனிசக் கட்சியின் உப தலைவர் டி.யு.குணசேகர தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிச கட்சி காரியாலயத்தில் நேற்று முன்தினம்புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

வரலாற்றில் என்றுமில்லாத வகையில் நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணம் எனக் குறிப்பிடுவதை மறுக்க முடியாது.

தவறான பொருளாதார முகாமைத்துவம் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் எடுத்துரைத்தபோது பொருளாதார பாதிப்பு ஏதும் ஏற்படாது.

இவர்கள் அமைச்சரவையில் இருந்தால் நான் அமைச்சரவைக்கு வருகை தரமாட்டேன் என முன்னாள் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ சிறு பிள்ளை போல் அடம்பிடித்ததைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சு பதவியில் இருந்து விலக்கினார்.

பொருளாதார நெருக்கடி இறுதியில் அரசியல் நெருக்கடியாக தீவிரமடைந்து எவரும் எதிர்பாராத வகையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தி, மக்களால் புறக்கணிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆட்சியதிகாரத்தை பெற்றுக்கொடுத்தது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண அரசாங்கம் இதுவரை பொருத்தமான நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை.

விவசாயத்துறை வீழ்ச்சியடைந்ததால் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்தது. விவசாயத்துறையை மேம்படுத்த அரசாங்கம் எவ்விதத் திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை.

மாறாக பொருளாதார நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் இறக்குமதி துறையை மாத்திரம் அரசாங்கம் நம்பியிருக்கிறது.

நாடு வங்குரோத்து அடைந்து விட்டது. ஆகையால் எமக்கு அரசமுறை கடன்களை மீள செலுத்த முடியாது என அரசாங்கம் உத்தியோகபூர்வமாக



அறிவித்தமை முட்டாள்த்தனமான தீர்மானமாகும் என்றார். (ம-7)

## நாட்டில் இன்றைய மின்வெட்டு விபரம்

(கொழும்பு)

நாட்டில் இன்று வெள்ளிக்கிழமைக்கான மின்வெட்டு நேர விபரங்களை இலங்கை பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

இதன்படி, இன்று அதிகமான வலயங்களில் 2 மணித்தியாலமும் 20 நிமிடங்களும் மின்வெட்டு நடைமுறைப்படுத் தப்பட வுள் ளதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம-7)

# பிராந்திய சபைகளை அமையுங்கள்

## பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் விக்னேஸ்வரன் கோரிக்கை

(கொழும்பு)

ஒவ்வொரு மாகாணத்திற்கும் வெவ்வேறு பிரச்சினைகள் இருப்பதால் பிராந்திய சபைகளை அமைக்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் கோரிக்கை விடுத்ததாக, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஊடகச் சந்திப்பொன்றில் வைத்து அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், வடக்கில் உள்ள பிரச்சினைகள் தெற்கில் உள்ள



பிரச்சினைகளைவிட வித்தியாசமானவை.

எனவே, ஒவ்வொரு மாகாணத்திலும் பிராந்திய சபைகளை ஸ்தாபிக்குமாறு குணவர்த்தனவிடம் யோசனை தெரிவித்துள்ளோம் என்றார். (ம-7)




**கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் - கொக்குவில்**

**நிர்வாக சபை தெரிவிற்கான விசேட பொதுக்கூட்டம் இரத்துச் செய்யப்பட்ட அறிவித்தல்**

பரிபாலன சபை பிரமாணம் பக்கம் 2, பந்தி 3-3:1 க்கு முரணாகவும் பரிபாலன சபை பிரமாணம் 3 ஆம் பக்கம் பந்தி 8 க்கு முரணாகவும் பக்கம் 7 பந்தி 17 க்கு முரணாகவும் நிர்வாக சபையின் தீர்மானம் இன்றியும் 21.09.2022 குருக்கள் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு எழுதிய கடிதத்தின் பிரகாரம் தனிப்பட்ட ஒருவரினால் அறிவிக்கப்பட்ட நிர்வாக சபை தெரிவிற்கான பொதுக்கூட்டம் இரத்துச் செய்யப்படுவதாக 25.09.2022 காலை 9.00 மணிக்கு நடந்த நிர்வாக சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இவ் அறிவித்தலை கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பொதுச் சபை அங்கத்தவர்களின் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

**அ.அருள்வதனன்**
**உபகாரியதரிசி**

(12945)

**செ.செல்வரஞ்ஜன்**
**தலைவர்**

**கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் - கொக்குவில்**



# கேள்வி அறிவித்தல்

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)**

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்ற வருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வியின் [NCB] மூலம் நடாத்தப்படும்.
3. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV இலும் மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
4. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல. 021 228 5932/021 222 5719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **30.09.2022ம் திகதி முதல் 13.10.2022ம்** திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
6. **05.10.2022ம்** திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு கேள்வியாளர்களுக்கான பெறுகை நடைமுறை முறைகள் தொடர்பான முன்கூட்டம் **(pre-bid meeting)** எமது அலுவலகத்தில் நடைபெறும். அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.
7. கேள்விகள் யாவும் **14.10.2022ந்** திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர் , கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின், கண்டி வீதி, கிளிநொச்சி முகவரியில் நேரடியாக நிதிக்கிளை பெறுகைப்பெட்டியினுள் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான இலக்கத்தினை தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் 14.10.2022 ந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.
8. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப் பணம் **(Bid Security)** செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
9. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுக்கோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million without VAT | Non Refund | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Validity Period |
| 01 | NP/KOC/RDHS/PSSP/Laptop/2022 | Procurement of Laptop | 03 | 2,500.00 | 50,000.00 | 25.12.2022 |
| 02 | NP/KOC/RDHS/Lia.Mit/Air.con/2022 | Supply of Air Conditioner - RMSD Kilinochchi | 05 | 2,500.00 | 79,000.00 | 25.12.2022 |

**தலைவர்,**
பிராந்திய பெறுகைக் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
கிளிநொச்சி.
TP- 021 228 5719, Fax- 021 228 5931
E-mail- rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com

(C-4998)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாள்ஸ் பொரோமியா நற்பணி ஆர்வலர்களால் வடமாகாணத்தின் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உதவி தேவையுடைய மாணவர்களுக்கு கற்பதற்கான உதவிச் செயற்பாட்டின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் யாழ்.நகரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேற்படி செயற்பாட்டிற்கென தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமது கல்வியினை இடையூறின்றித் தொடர்வதற்கான உதவிகள் அவர்கள் பாடசாலைக் கற்றல் நடவடிக்கையில் ஈடுபடும் வரை வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# போதைப் பாவனைக்கு எதிராக யாழில் விழிப்புணர்வுப் பேரணி




(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நடவடிக்கையாக, யாழ். போதனா மருத்துவமனை தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று பேரணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்றலில் மதியம் 12 மணியளவில் இந்தப் பேரணி ஆரம்பித்து மணிக்கூட்டு கோபுர வீதியூடாக யாழ். பொலிஸ் நிலையத்தை அடைந்து அங்கிருந்து பிரதான வீதியூடாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தை சென்றடைந்து அரச அதிபரிடம் மகஜரும் கையளிக்கப்பட்டது.

(4-18-33-104)

# திருமுறை பண்ணிசை வகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருமுறைப் பண்ணிசை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஓதுவார் மூர்த்திகள் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தனினால் குறித்த பண்ணிசை வகுப்புக்கள் நடத்தப்படும் என அகில இலங்கை திருமறைமன்றச் செயலாளர் செ.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார். (4)

# புதிய சந்தை கட்டடம் சத்தியக்காட்டில் திறந்து வைப்பு



(அராலி)

வலிகாமம் பிரதேச சபைக்கு உட்பட்ட சத்தியக்காடு மீன், கோழி இறைச்சி மற்றும் கருவாட்டு சந்தை கட்டடத் தொகுதியானது நேற்று வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் த.நடனேந்திரனினால் சம்பிரதாய பூர்வமாக நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது. ரூபாய் 10.91 மில்லியன் செலவில் பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் இந்த கட்டடம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(4-104)

# நல்லூரில் யோகக்கலை கற்கையின் புதிய பிரிவுகள் ஆரம்பம்

(குப்பிழான்)

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலைக் கற்கை நெறியின் புதிய பிரிவு எதிர்வரும் 8 ஆம் திகதி நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணி முதல் காலை 8 மணிவரை நடைபெறும் இவ் வகுப்புக்களில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றிக் கலந்து கொள்ள முடியும்.

மூன்று மாத காலங்களைக் கொண்டு அமைந்த இவ் அடிப்படைக் கற்கைநெறியைப் பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயில விரும்புவோர் வடமாகாணக் கல்வி அமைச்சிலோ அல்லது அதன் இணையத்தளத்திலோ விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 05.10.2022 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கல்வி அமைச்சு, வடமாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலை பேசி இலக்கங்களுடன் அரச வேலை நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-18)


## யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம் அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் - வகை II
2. யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம் - வகை II
3. யா/ வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம் - வகை III
4. யா/ தோப்பு அருள்நந்தி வித்தியாலயம் - வகை III
5. யா/ கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை - வகை III

**தகைமைகள்**

◆ வகை II பாடசாலைக்கு **இலங்கை அதிபர் சேவை தரம்** II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **இலங்கை அதிபர் சேவை தரம்** II ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் தரம் III அதிபர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

◆ வகை III பாடசாலைக்கு இலங்கை **அதிபர் சேவை தரம் III** ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

❖ விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக்குறைந்தது மூன்றாண்டு காலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.

❖ விண்ணப்பதாரி தற்போது அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் 03 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களுக்கும், உதவி, பிரதி அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கும் இந்நிபந்தனை பொருத்தமற்றது.

**குறிப்பு**

❖ மேற்படி பதவிகளுக்கு யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த தகுதியான அதிபர்களிடமிருந்து கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்ப படிவத்தை யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2022.10.12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் **"யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர்"** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"அதிபர் பதவிக்கான விண்ணப்பம் - 2022(III)"** எனக் குறிப்பிடவும்.

**திரு.மு. இராதாகிருஷ்ணன்,**
**யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்,**
**செம்மணி வீதி, நல்லூர்.**

(C-4996)


## முன்பள்ளி விளையாட்டு விழா

(குருநகர்)

குருநகர் சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு குருநகர் கலாசார மண்டப மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# சாவகச்சேரியில் இருவர் ஹெரோயினுடன் கைது

(சாவகச்சேரி)

ஹெரோயின் போதைப்பொருளினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரிப் பொலிஸாரால் வெவ்வேறு இடங்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸாரின் இரவு நேர ரோந்துக் கடமையின் போதே இவ்வாறு நாவற்குழி மற்றும் மீசாலைப் பகுதிகளில் குறித்த கைது நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதுடன் சந்தேகநபர்களிடம் இருந்து 18மில்லிகிராம் ஹெரோயினையும் மீட்டுள்ளனர்.

கைதான நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2022 இற்கான மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 2 தங்கம் உட்பட 12 பதக்கங்களைப் பெற்று மாகாண மட்டத்தில் சாதனை படைத்துள்ளது.

இவ்வாண்டிற்கான தேசிய மட்டப் போட்டிக்கு இவர்கள் தெரிவாகி உள்ளனர். இவர்களின் பயிற்றுவிப்பாளர் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவனான சென்சே.எஸ். விஜயராஜ் என்பது குறிப்பிடத்தக்கது.

# கள்ளப்பாடு பிறீமியர் லீக் இன்று ஆரம்பம்

முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் முதல் முறையாக வீரர்களை ஒருங்கிணைக்கும் முகமாக கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக்கழகம் நடத்தும் கள்ளப்பாடு பிறீமியர் லீக் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன்போது பிரதம விருந்தினராக யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், சிறப்பு விருந்தினர் முல்லைத்தீவு துடுப்பாட்ட சங்கத் தலைவர் கே.உதயசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)



சுவிஸ் நாட்டின் 26 மாநிலங்களில் உள்ள பாடசாலைகளில் UBS KIDS CUP 2022 வங்கி மூலம் மெய்வல்லுநர் போட்டி நடைபெற்று அதில் முதல் மூன்று இடங்களை பெறும் மாணவர்களை தெரிவு செய்து சூரிச்சில் உள்ள சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நாடு தழுவிய ரீதியில் கடந்த 10 ஆம் திகதி போட்டிகள் நடைபெற்றது.

அதில் சூரிச் மாநிலத்திலிருந்து தெரிவான தமிழ் மாணவி செல்வி காவியா அகிலரூபன் ஓட்டம், நீளம்பாய்தல், பந்தைறிதல் ஆகிய போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்று "UBS KIDS CUP 2022" GOLD MEDAL பெற்றுள்ளார். (4)

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் இருபது-20 தொடர் இந்தியா வெற்றி



தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணிக்கெதிரான முதலாவது இருபது-20 போட்டியில் இந்தியக் கிரிக்கெட் அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது. மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் 1-0 என்ற கணக்கில், இந்தியக் கிரிக்கெட் அணி முன்னிலை பெற்றுள்ளது.

திருவானந்தபுரத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 106 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதனைத்தொடர்ந்து 107 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இந்திய அணி, 16.4 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்கள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் இந்தியா அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. (4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2707

f Search for people, places and things

### டியா

தரையில் கால் படாமல் சிலரை
தாங்கு தாங்கு என்று
நீ தாங்கினாலும்
கலட்டி விட வேண்டிய
இடத்தில் உன்னை கழட்டி
விடுவார்கள்.

### கிருனியன்



அன்பு அனைத்தையும் அழகாக காட்டும்!
நம்பிக்கை அனைத்தையும் நல்லதாக காட்டும்!
உழைப்பு அனைத்தையும் உயர்வாக காட்டும்!
இயற்கை அனைத்தையும் இறைவனாக காட்டும்!
வாழ்க்கை அனைத்தையும் வாய்ப்பாக காட்டும்

### சயானா

தொலைந்த அத்தனையிலும்
துரோகத்தின் சாயல்
கிடைத்த அத்தனையிலும்
நிம்மதியின் சாயல்...



### மனோ

சில நேரங்களில் நாம் எடுக்கும்
பிழையான முடிவுகள்
நம்மை சரியான பாதையில்
பயணிக்கக் கற்றுக் கொடுக்கின்றன



### ரேஷ்மிதா

சொந்தம் என்பது சுண்ணாம்பு மாதிரி
அளவாக இருக்க வேண்டும்
அளவுக்கு அதிகமானால் வாய்
வெந்துவிடும் வாழ்க்கை நொந்துவிடும்



### நவின்



பிரச்சினைகளை சொல்லி வாழ்வது
வாழ்க்கை இல்லை...
இதெல்லாம் ஒரு பிரச்சினையா என்று
சொல்லிவிட்டு நகர்வது தான் வாழ்க்கை

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை

# மீண்டும் மீண்டும் மறுக்கும் சரத் பொன்சேகா

(கொழும்பு)

**"இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை. 40 ஆயிரம் பேர் கொல்லப்படவும் இல்லை" என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மீண்டும் மறுப்பு தெரிவித்தார்.**



ஜெனிவா விவகாரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. "இராணுவக் குறைப்பு செய்யப்பட வேண்டும் என்ற ஜெனிவா யோசனை ஏற்புடைய விடயம் அல்ல. அதனை ஏற்க முடியாது.

இராணுவப் பலத்தை எண்ணிக்கையுடன் மதிப்பிடக்கூடாது. இராணுவத்துக்கு ஒதுக்கப்படும் நிதியை வைத்துத்தான் கணக்கிட வேண்டும். இலங்கை இராணுவம் இன்னமும் தொழில்நுட்ப ரீதியில் மேம்படவில்லை. எனவே, படைக்குறைப்பு யோசனை ஏற்புடையது அல்ல.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை. 40 ஆயிரம் பேர் கொல்லப்படவும் இல்லை. ஓரிரு சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம். அது தொடர்பில் உள்ளக விசாரணை நடத்தலாம். இதனைப் போர் முடிந்த கையோடு செய்யாததாலேயே பிரச்சினை ஏற்பட்டது" என பொன்சேகா தெரிவித்தார். (நி)

## உலக சந்தையில் மீண்டும் உயரும் மசகு எண்ணெய் விலை

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை நேற்று முன்தினம் சற்று அதிகரித்தது.

இதன்படி, நேற்று முன்தினம் 86 அமெரிக்க டொலராகக் காணப்பட்ட மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 88 அமெரிக்க டொலராக காணப்பட்டது.

பிரண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 86 முதல் 89 அமெரிக்க டொலராகவும் WTI மசகு எண்ணெய் பீப்பாய் 80 முதல் 97 அமெரிக்க டொலராகவும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


# மரண அறிவித்தல்

1929 ❖ 03 ❖ 18



2022 ❖ 09 ❖ 27

## அமரர். கந்தையா மாணிக்கம்

புத்தூர் வடக்கு, புத்தூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர்.கந்தையா மாணிக்கம் அவர்கள் கடந்த 27.09.2022 செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னாரின் பூதவுடல் கிந்து சிட்டி ஆடையான்தாழ்வு இந்து மயானத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புத்தூர் வடக்கு,
புத்தூர்.

(12941)

தகவல்: குடும்பத்தினர்.


# கோட்டாவை சந்தித்தார் சுப்ரமணியன் சுவாமி



(கொழும்பு)

இந்திய பாரதீய ஜனதா கட்சியின் மூத்த அரசியல்வாதி சுப்ரமணியன் சுவாமி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இந்த சந்திப்பு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இராசிபலன்

30.09.2022
புரட்டாதி 13, வெள்ளிக்கிழமை
பஞ்சமி முன்னிரவு 10.59 மணிவரை

விசாகம் காலை 6.35 மணிவரை
அனுசம் பின்னிரவு 5.26 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை

இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சந்திராஷ்டமம் - பரணி

வளவன்




எதிர்பாராத வகையில் சில முரண்பாடுகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது, யோசித்துச் செயற்பட வேண்டிய நாள்.




உறவினர்களின்- சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், நன்மைகள் நடைபெறும் நாள், கனவு பலிதமுண்டு, வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.




நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.




பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.




உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், வழிபாடு முன்னேற்றம் தரும்.




பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், புதிய பொறுப்புகளும் பதவிகளும் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.




ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்.




கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுபவிரயங்கள் கூடும்.




முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும் வாய்ப்புண்டு, அருமையான நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.




திறமைமிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், பயணங்கள் கைகூடும்.

மற்றவர் உன்னை ஏமாற்ற நீ தான் காரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## பகைவனுக்கருள்வாய்!

(நேற்றைய தொடர்ச்சி)

ஜக்கு சம்பந்தப்பட்டும் எந்த விடயமும் தனக்குத் தேவை இல்லை எனக் கூறி ஜக்கு தலையிடாத ஒரு வீட்டுப் பெண்ணை மணந்து கொண்டான்.

ஜக்குவின் எந்த செய்கையிலும் ஏதோ சதி இருக்கும் என்றே அவன் எண்ணினான். தன் திருமணத்திற்கு ஞானதீபன் ஜக்குவை அழைக்கவும் இல்லை. அது மட்டுமல்ல ஜக்குவின் விவாகம் நடந்தபோது அழைப்பு இருந்தும் ஞானதீபன் அவ்விவாகத்திற்குப் போகவில்லை.

ஞானதீபனுக்குத் திருமணமாகி ஒரு வருடமாயிற்று. அப்போ அவன் வயல்களை அடுத்து பத்து ஏக்கர் நிலம் விலைக்கு வந்தது. அதை வாங்கலாம் என்றால் அவனிடம் முழுப் பணம் இல்லை.

ஒரு ஆயிரம் வராகன் குறைவாக இருந்தது. அத்தொகையை யாரிடமிருந்தாவது கடன் வாங்கலாம் என அவன் எண்ணினான்.



அப்போது பட்டணத்திலிருந்து பங்காரய்யா என்ற வியாபாரி ஞானதீபனின் ஊருக்கு வந்தான். அவன் ஞானதீபனைக் கண்டு "உங்கள் வயலில் பயிர் நன்றாக உள்ளது. அதற்கு நான் இன்றைய சந்தை விலைக்கு இரண்டு பங்கு விலை கொடுக்கிறேன்" என்றான்.

ஞானதீபன் அது கேட்டு மகிழ்ந்து போனான். அவன் பங்காரய்யாவிடம் "ஐயா என் பயிர் மிக உயர்ந்தது என்று எப்படிக் கண்டு கொண்டீர்கள்?" என்று கேட்டான். அதற்கு பங்காரய்யா "உங்கள் பெரியப்பாவின் மகன் ஜக்குதான் கூறினான். மேலும் நீங்கள் நேர்மையானவர் என்றும் வியாபாரத்தில் எவ்வித ஏமாற்ற வேலையும் செய்வதில்லை என்றும் கூறினான்" என்று சொன்னான்.

அதைக் கேட்டதும் ஞானதீபன் பங்காரய்யாவுக்குத்தான் தன் பயிரை விற்கப் போவதில்லை என்று கூறி அவனை அனுப்பி விட்டான். ஞானதீபனின் மனைவி "பயிருக்கு நல்ல விலை கிடைக்கிறது.

உங்கள் சகோதரன் மனம் திருந்தி உங்களுக்கு நன்மை செய்யவே முயல்கிறார். நீங்களோ அவரிடம் பகைமை கொண்டு அவர் சம்பந்தப்படும் எந்த விடயத்தையும் கண்மூடித்தனமாக புறக்கணிக்கிறீர்களே.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## சிங்கம் புறப்பட்டது




'என்ன.... கொன்று விட்டார்களா?

'அப்படித்தான் செய்தி வந்திருக்கிறது'

'ஐயனே நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? எங்கே இருக்கிறீர்கள்? இது நிஜமா? பொய்யா? சரிந்து கீழே விழுந்தாள் கண்ணகி.

சில விநாடிகள் தான் அவளுக்கு நடந்த அனைத்தும் புரிந்து விட்டது.

அதன் பிறகு அவள் அழவில்லை கோபத்தில் கண்கள் சிவக்க உதடு துடிக்க எழுந்தாள்.

'பாண்டியனின் அறிவீனத்தால் ஓர் உயிர் பலியாக அதைப் பார்த்து நான் அழுவதா? ஊரே தூற்றும்படியும் கேலி செய்து சிரிக்கும்படியும் அரசன் செய்த கொலைக்கு நான் அழுவதா? மாட்டேன் நான் அழமாட்டேன்.

'ஆயர் குலப் பெண்களே நீங்கள் சொல்லுங்கள் சூரியனே, நீ சொல்... ஆழி சூழ் உலகமே நீ சொல்... என் கணவன் கள்வனா? என்று மிரட்டுகிற தொனியில் கேட்டாள் கண்ணகி.

அப்போது வானகத்தில் இருந்து ஓர் அசரீரி ஒலித்தது 'உன் கணவன் கள்வன் இல்லை. அவனைக் கள்வன் என்று சொன்ன இந்த ஊர் நெருப்புக்கு இரையாகும்' என்றது.

அதற்குப் பிறகு கண்ணகி ஒரு விநாடி கூடத் தாமதிக்கவில்லை. தன் இன்னொரு சிலம்பைக் கையில் ஏந்திக் கொண்டாள். வேகம் கொண்ட புயலைப்போலப் புறப்பட்டாள்.

### நீதி கேட்டு வரும் பயணம்

நகரின் மையப் பகுதியில் நின்று சூளுரைத்தாள் கண்ணகி. 'மதுரை நகர்வாசிகளே! கேளுங்கள் என் கால் சிலம்பின் விலையைத் தராமல் ஏமாற்றுவதற்காக என் கணவனைக் கள்வன் என்று பழி சுமத்திய நாடு இது.

பழியோடு நில்லாமல் அவரைக் கொலை செய்த கொடிய நாடு. கணவனால் விரும்பப்படும் பெண்களே! உங்கள் கண் முன்னால் நான் என் கணவனைக் காண்பேன். அவர் சொல்லும் இனிய மொழியைக் கேட்பேன். இது நடக்கவில்லையானால் என்னைக் கள்வனின் மனைவி என்று தூற்றுங்கள்.

இதைக் கேட்ட மக்கள் கண்ணகி மேல் இரக்கப்பட்டார்கள். ஆனால் அதே சமயம் அவள் சொன்ன சபத வார்த்தைகளை யாரும் நம்பவில்லை.

இறந்தவனாவது எழுந்திருப்பதாவது... பாவம் அளவில்லாத வருத்தத்தில் ஏதோ பிதற்றுகிறாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 88

அதே சமயம் ஜெலென்ஸ்கி "பரஸ்பர உதவியை" மறுத்தார். ஜனநாயகக் கட்சியினர் ட்ரம்பை பதவி நீக்கம் செய்யும் நடவடிக்கைகளை தொடக்கினர். பின்னர் அவர் அரசியல் விசாரணையில் விடுவிக்கப்பட்டார்.

### ஊழல் குற்றச்சாட்டுகள்

ஜெலென்ஸ்கி மீதும் ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளன. 2021 ஒக்டோபரில் கசிந்த பண்டோரா ஆவணங்களில் அவர் பெயர் இடம் பெற்றிருந்தது. இது உலகின் பணக்காரர்கள் மற்றும் சக்திவாய்ந்தவர்களின் மறைத்து வைக்கப்பட்ட செல்வத்தை அம்பலப்படுத்தும் ஆவணங்களாகும்.

ஜெலென்ஸ்கியும் அவரது நெருங்கிய வட்டமும் வெளிநாட்டு நிறுவன வலையமைப்பின் பயனாளிகள் என்பதை ஆவணங்கள் வெளிப்படுத்தின.

ஆவணங்களில் புதிய விபரங்கள் ஏதும் இல்லை என்றும் தானும், தனது நிறுவனமான Kvartal 95 ஐச் சேர்ந்த எவரும் பணமோசடியில் ஈடுபடவில்லை என்றும் ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.

### உக்ரைனிய பாராளுமன்றத் தேர்தல் 2019

புதிதாக பதவியேற்ற ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தான் பதவியேற்ற ஒரு நாளுக்குப் பிறகு, 21 மே 2019 அன்று, பாராளுமன்றத்தை கலைத்தார்.இதனால் முதலில் ஒக்டோபர் இறுதியில் நடத்த திட்டமிடப்பட்ட உக்ரைனிய பாராளுமன்றத் தேர்தல் 21 யூலை 2019 அன்று திடீர் தேர்தலாக நடைபெற்றது. தேர்தல் முடிவுகளின்படி 254 இடங்களை ஜனாதிபதி ஜெலென்ஸ்கியின் மக்கள் சேவகர் கட்சி பெற்றது ஒரு புதுமையாக இருந்தது.

மக்கள் சேவகர் கட்சி பெற்ற பிரதிநிதிகளில் நாடு தழுவிய மூடப்பட்ட கட்சிப்பட்டியல் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் மூலம் 124 உறுப்பினர்களும் தொகுதிவாரி (FPTP) மூலம் 130 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். நாடு தழுவி அக்கட்சி பெற்ற மொத்த வாக்குகள் 6,307,793 (43.16%) ஆகும். நாடு தழுவிய ரீதியில் வாழ்க்கைக்கான எதிர்த் தளக்கட்சி 1,908,111 (13.05%) வாக்குகளைப் பெற்று மூடப்பட்ட கட்சிப்பட்டியல் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் மூலம் 37 உறுப்பினர்களையும் தொகுதிவாரி மூலம் 6 உறுப்பினர்களையும் வென்று இரண்டாம் இடத்தைப் பெற்றது.

ஒலெக்ஸி வலேரியோவிச் ஹோன்சாருக் என்ற உக்ரைனிய அரசியல்வாதி 29 ஓகஸ்ட் 2019 முதல் 4 மார்ச் 2020 வரை உக்ரைனின் பிரதமராக பணியாற்றினார். நியமனத்தின் போது 35 வயதில், உக்ரைனிய வரலாற்றில் அவர் மிகவும் இளைய பிரதமர் ஆவார். 2020 மார்ச் 4 இல் இருந்து டெனிஸ் அனடோலியோவிச் ஷ்மிஹால் உக்ரைனின் பிரதமராக பணியாற்றி வருகிறார்.

உக்ரேனிய பிரதம மந்திரிகள்



ஒலெக்ஸி ஹோன்சாருக் 2019-2020 | டெனிஸ் ஷ்மிஹால் 2020-

தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் 80 சதவீதம் பேர் பாராளுமன்றத்திற்கு புதியவர்கள். கடைசிப் பாராளுமன்றத்தில் இருந்த பிரதிநிதிகளில் 83 பேர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதைவிட 13 பழைய பாராளுமன்ற உறுப்பினர்களும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

மக்கள் சேவகர் கட்சியின் அனைத்து பிரதிநிதிகளும் அரசியலுக்கு புதியவர்கள். புதிய பாராளுமன்ற உறுப்பினர்களில் 61 வீதமானவர்கள் இதற்கு முன்னர் அரசியலில் ஈடுபடாதவர்கள்.

தேசிய அளவிலான கட்சிப்பட்டியலில் 21 கட்சிகள் தேர்தலில் பங்கேற்றன. 225 தொகுதிகளில் 26 தொகுதிகளில் தேர்தல்கள் நடைபெறவில்லை. இத் தொகுதிகள் உள்ளடங்கும் பிரதேசங்கள் மார்ச் 2014 இல் கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைத்ததாலும், தோனேஸ்க் மற்றும் லுகான்ஸ்க் மாநிலங்களின் சில பகுதிகளை பிரிவினைவாதிகள் ஆக்கிரமித்ததாலும் உருவான அரச கட்டுப்பாடற்ற பகுதிகளாகும்.

இந்த தேர்தல்களுக்காக 5,845 வேட்பாளர்கள் வேட்புமனுக்கள் தாக்கல் செய்திருந்தனர். அதில் 3,171 வேட்பாளர்கள் ஒற்றை உறுப்பினர் தொகுதிகளுக்கும் 2,674 வேட்பாளர்கள் 22 கட்சிகளுடன் நாடு முழுவதுக்குமான உள்ள ஒரு தனி தொகுதிக்கும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். (தொடரும்)

# கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் தென்கொரியா வந்தடைந்தார் கமலா ஹாரிஸ்



(சியோல்)
வடகொரியாவின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தென் கொரியா வந்தடைந்துள்ளார்.

இந்த விஜயத்தின் போது, கமலா ஹாரிஸ் எல்லை மற்றும் வடக்கு மற்றும் தெற்கைப் பிரிக்கும் அதிக வலுவூட்டப்பட்ட இராணுவமயமாக்கப்பட்ட மண்டலத்திற்கு பயணம் செய்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் உள்ள ஒரு இராணுவத் தளத்தில் அமெரிக்கத் துருப்புக்களிடம் உரையாற்றிய அவர் வடகொரியாவின் சமீபத்திய ஏவுதல்கள் மற்றும் அதன் பிராந்திய ஸ்திரத் தன்மைக்கு அச்சுறுத்தலான சட்ட விரோத ஆயுதத் திட்டம் ஆகியவற்றைக் கண்டித்தார்.

அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தென் கொரிய விஜயத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், வடகொரியா நேற்று முன்தினம் அதன் தலைநகர் பியாங் யாங்கில் இருந்து கிழக்கு கடற்பகுதியை நோக்கி இரண்டு குறுகிய தூர ஏவுகணைகளை ஏவியது.

கொரிய தீபகற்பத்தை சுற்றியுள்ள கடற்பரப்பில் அமெரிக்காவும் தென் கொரியாவும் கூட்டு கடற்படை பயிற்சிகளை நடத்தி வரும் நிலையில், ஐ.நாவின் தடைகளை மீறும் இந்த ஏவுதல் வந்துள்ளது.

இந்த குறுகிய தூர ஏவுகணை சோதனையை தென் கொரியா மற்றும் ஜப்பான் அதிகாரிகள் கடுமையாக கண்டித்துள்ளனர்.

வட கொரியா இந்த ஆண்டு இதுவரை 30இற்கும் மேற்பட்ட ஆயுதங்களை சோதனை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி)

# உக்ரைன் நகரங்களை ரஷ்யாவுடன் இணைக்கும் முயற்சி வெற்றி

(மொஸ்கோ)
போரில் உக்ரைனின் லுஹான்ஸ்க், டோனெட்ஸ்க், கெர்சன், ஸபோரிஸியா ஆகிய 4 நகரங்களை தங்கள் நாட்டுடன் இணைக்க முன்னெடுத்த வாக்கெடுப்பில், ரஷ்யா வெற்றிபெற்றுள்ளதாக ரஷ்ய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து, உக்ரைனின் லுஹான்ஸ்க், கெர்சன் பகுதிகளை இணைத்துக் கொள்ளுமாறு ரஷ்யாவால் நியமிக்கப்பட்ட அந்தப் பிராந்தியங்களின் தலைவர்கள் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

அந்தப் பகுதிகளில் நடத்தப்பட்ட மேற்கத்தேய நாடுகளால் சட்டவிரோதமாக அறிவிக்கப்பட்ட பொதுவாக்கெடுப்பில் ரஷ்யாவுடன் இணைய பெரும்பாலான பொதுமக்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த அழைப்பை பிராந்தியத் தலைவர்கள் விடுத்துள்ளனர்.

பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்ட மற்ற இரு ரஷ்ய ஆக்கிரமிப்பு உக்ரைன் பிரதேசங்களின் தலைவர்களும் இதேபோன்ற கோரிக்கையை விரைவில் விடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகவே இந்த 4 பிராந்தியங்களையும் ரஷ்யாவுடன் இணைத்து கொள்வது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பை புடின் உடனடியாக வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.(நி)

# உணவகத்தில் தீ விபத்து 17 பேர் உயிரிழப்பு

## சீனாவில் துயரம்



(பீஜிங்)
சீனாவின் வடகிழக்கு நகரமான சாங்சுனில் உணவகம் ஒன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 17 பேர் உயிரிழந்தனர். மேலும் 3 பேர் காயமடைந்தனர்.

சமையல் எரிவாயு வெடித்து இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சீனாவில் கட்டடங்களின் மோசமான வடிவமைப்பு, போதிய பாதுகாப்பு முன்னேற்பாடுகள் இல்லாதது போன்ற காரணங்களால் அடிக்கடி தீ விபத்து மரணங்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

அந்த நாட்டின் சாங்ஷா நகரில் கடந்த ஏப்ரல் மாதம் ஏற்பட்ட தீ விபத்தில் 53 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 80 வீதமான மக்கள் தொற்றா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்

## மருத்துவர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் 80 வீதமான மக்கள் தொற்றா நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 34 வீதமானவர்கள் மாரடைப்பினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தொற்றா நோய்கள் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சமிந்தி சமரகோன் தெரிவித்தார்.**

உலக இதய தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கழுத்தின் ஓரங்களை அழுத்துவது போல் கடுமையான வலி, கையின் மேலிருந்து கீழாக ஏற்படும் வலி, வயிற்றில் கடுமையான வலி, தோள்களில் வலி என்பன மாரடைப்பின் அறிகுறியாக இருக்கலாம் என இதய நோய் நிபுணர் மருத்துவர் சம்பத் விதான வாசம் தெரிவித்துள்ளார்.

அத்தகைய அறிகுறிகள் ஏற்பட்டு ஒரு மணி நேரத்திற்குள் மருத்துவமனைக்குச் செல்வது கட்டாயமாகும் என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

மேலும் சிகிச்சை பெறுவதில் தாமதம் ஏற்பட்டால் அது இதயத்தின் பாதிப்பை அதிகரிப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

# கோதுமை மாவின் விலை மேலும் அதிகரிக்கலாம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் கோதுமை மாவின் விலை மேலும் அதிகரிக்கலாம் என உணவக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சந்தையில் தற்போது மாவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக மாவின் விலை மேலும் அதிகரிக்கலாம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது சந்தையில் ஒரு கிலோ மா 410 முதல் 420 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

மாவின் விலை அதிகரிப்பு காரணமாக சில உணவகங்கள் மூடப்பட்டுள்ளதுடன் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன என அவர்கள் தெரிவித்தனர். (நி)

# மத வழிபாட்டு தலங்களுக்கு சூரிய சக்தி மின்படலங்கள்

## இந்திய கடனுதவியில் வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

மதவழிபாட்டு தலங்களில் சூரிய மின் உற்பத்தி படலங்களை பொருத்துவதற்கான கலந்துரையாடல் ஒன்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் அமைச்சர் விதுர விக்ரம நாயக்க, கல்வி இராஜாங்க அமைச்சர் மற்றும் மேலும் சில அமைச்சுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உயர்நிலை அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

இந்திய கடன் உதவியின் கீழ் இந்த திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளுடன் அரசாங்கம் விரைவில் பேச்சு

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

"தேசிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு விரைவில் பேச்சை ஆரம்பிக்கும்" என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

தேசிய பிரச்சினைகள் தொடர ஒரு போதும் இடமளிக்க முடியாது என்று தெரிவித்த தினேஷ் குணவர்த்தன, குறுகிய காலத்துக்குள் இந்தப் பிரச்சினைகளுக்குள் உரிய தீர்வுகளைக் காண வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தேசிய பிரச்சினைகள் நீடித்தால் இன, மத நல்லிணக்கம் ஏற்படாது. நாட்டில் ஏதோவொரு வகையில் இன ரீதியிலும், மத ரீதியிலும் கருத்து மோதல்கள் உருவாகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடத்தில் பிளவுகளை ஏற்படுத்திக் குளிர்காய சிலர் முற்படுகின்றனர்.

தீர்வு விடயம் தொடர்பில் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுடன் அரசாங்கம் விரைவில் பேச்சை ஆரம்பிக்கவுள்ளது" என அவர் தெரிவித்தார். (நி)



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில், நவராத்திரி பூஜை சிறப்பு வழிபாடு நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இச்சிறப்பு வழிபாட்டில், இந்திய அமைச்சரவை முன்னாள் அமைச்சர் கலாநிதி சுப்ரமணியன் சுவாமி சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார்.


**PHARMACIST'S (EXTERNAL EXAM)**
**DECEMBER - 2022**

மேற்படி பரீட்சை மார்கழி மாதம் CEYLON MEDICAL COLLEGE COUNCIL ஆல் கொழும்பில் நடைபெற உள்ளது .இப் பரீட்சைக்குரிய மீட்டல் வகுப்புகள் OCTOBER / NOVEMBER மாதங்களில்,கிழமை நாட்களான திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் காலை 9.00 – 12.30 மதியம் வரை நடத்தப்படவுள்ளது.

2025 ஆண்டிற்கான மருந்தியலாளர் பரீட்சைக்கு G.C.E A/L இல் இரசாயன பாடம் உட்பட 3 பாடங்களில் சாதாரண சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் SRILANKA MEDICAL COUNCIL இல் OCTOBER 1 ஆம் திகதியிலிருந்து ONLINE மூலம் ஏற்றுக்கொள்ளப்படும்.

இப்பரீட்சை சம்மந்தமான தகவல்களையும் விண்ணப்பப்படிவங்களை

**நேரு SIR, யாழ்ப்பாணக்கல்லூரி , 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில்** பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு:-0773164251**

(930)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா:42 ½ சூரி 3 செவ் 5 இல்<br>உயரம்:5' 10"<br>தகைமை/தொழில்: மதுவரி உத்தியோகத்தர் (அரச தொழில்)<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் வன்னி மாவட்டம் அதிக விருப்பம்<br>தொ.இ: B/12990 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 63 ¾ சூரி . செவ் 4 இல்<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/3014 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 28 ½ சூரி 7 செவ் 6 இல்<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: BSc MSc Engineer<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி<br>தொ.இ: B/12992 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 72 சூரி. செவ் 7 இல்<br>உயரம் 5' 2"<br>தகைமை/தொழில்: BBA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:அரச தொழில் அல்லது வெளிநாடு<br>தொ.இ: G/9488 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>கி.பா: சூரி 1 செவ் 2 இல்<br>உயரம்: 5' 10"<br>தகைமை/தொழில்:அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/12993 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>கி.பா: சூரி. செவ் 5 இல்<br>உயரம் : 5' 4"<br>தகைமை/தொழில்:MBBS வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ:G/7089 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம் : உத்தராடம் 4<br>தகைமை/தொழில்:A/L (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12994 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 16 சூரி 6 செவ் 4 இல்<br>உயரம் :5' 2"<br>தகைமை/தொழில்: HND,IT.BSc, B.Com Bank (அரச தொழில்)<br>எதிர்பார்ப்பு :- பட்டதாரி அரசதொழில்<br>தொ.இ:G/10870 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடனை பிறர் அழிக்கத் தேவையில்லை. அவன் தன்னைத்தானே அழித்துக்கொள்கின்றான்.
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## போதைப்பொருளைத் தடுக்க ஊரெங்கும் விழிப்புக்குழுக்கள் தேவை

எங்கள் இனத்தை வேரறுக்க போதைவஸ்துப் பாவனையை எங்கள் பிள்ளைகளிடையே பரப்புகின்ற கூட்டமொன்று மிகத் தீவிரமாகக் களமிறங்கியுள்ளது.

எனினும் இதுபற்றி நம் தமிழ் அரசியல்வாதிகளுக்கு எந்தக் கரிசனையும் கிடையாது.

தமிழ் மக்கள் நம்பி வாக்களித்துவிட, அவர்கள் என்ன செய்கிறார்கள்? எப்படி நடந்து கொள்கிறார்கள்? என்பதை எங்கள் மக்கள் தங்கள் கண்களால் கண்டு கொள்கிறார்கள்.

எனினும் இந்தச் சிறுமைத்தனங்களுக்கு நாம் முன்னுரிமை கொடுப்போமாயின், எங்கள் இளம் சந்ததியும் காடைத்தனங்களை அரசியல் சிறப்பு என்று கருதி விடுவார்கள்.

ஆகையால் எங்கள் எதிர்காலச் சந்ததியேனும் நேர்மையான அரசியலைக் கற்றறிய வேண்டுமென்பதற்காக, தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலின்போது நடந்த அநாகரிகங்களை நாம் முடிந்தளவு தணிக்கை செய்தோம்.

எனினும் எங்கள் தமிழ் மக்கள் இவற்றையெல்லாம் தங்களின் இதயங்களில் பதிவு செய்து வைத்து உரிய நேரத்தில் உரிய தீர்ப்பை வழங்குவார்கள் என்ற நம்பிக்கையோடு அந்த விடயத்தை ஒருபுறம் வைத்துவிடலாம்.

இப்போது எங்களின் முன் நிற்கக்கூடிய மிகப்பெரிய சவால் போதைவஸ்து பாவனையாகும்.

ஆம், எங்கள் இளம் பிள்ளைகளில் ஒரு குறிப்பிட்ட தொகையினர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி, தங்களின் வாழ்வைத் தொலைத்தது மட்டுமன்றி அவர்களை நம்பியிருந்த பெற்றோர்களையும் உறவுகளையும் நடுத்தெருவில் விட்டுள்ளனர்.

இந்த நிலைமை இப்படியே கவனிக்கப்படாமல் விடப்படுமாயின், அல்லது பொலிஸார் பார்த்துக் கொள்வார்கள் என்று பேசாதிருந்தால் எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

உண்மை. போதைப்பொருள் கடத்தலிலும் அதன் விற்பனையிலும் பொலிஸ் அதிகாரிகள் சிலருக்குத் தொடர்புண்டு என்ற தகவல் ஏலவே வெளியாகியுள்ளன.

ஆக, போதைப்பொருள் பாவனையில் இருந்து நம் பிள்ளைகளைப் பாதுகாப்பதாயின், பெற்றோர்களும் அபிமானிகளும் பொது அமைப்புகளும் பாடசாலைச் சமூகமும் ஊர் மக்களும் ஒன்றுகூடி நிலைமையை ஆராய்ந்து உரிய திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

அதில் ஒன்றுதான் ஊரெங்கும் விழிப்புக் குழுக்களை அமைப்பதாகும்.

ஊரெங்கும் விழிப்புக்குழுக்கள் இயங்குமாயின், அதற்கு நேர்மையுள்ள பொலிஸார் நிச்சயம் ஒத்துழைப்பு வழங்குவர்.

தவிர, விழிப்புக்குழுக்கள் இயங்கும்போது, போதைவஸ்து வியாபாரம் தொடர்பிலான பல்வேறு தகவல்கள் அங்கு வந்து சேரும்.

இது போதைப்பொருள் ஒழிப்புக்குத் துணையாய் அமையும்.

ஆகையால் ஊரெங்கும் விழிப்புக்குழுக்களை அமைப்பது தொடர்பில் பிரதேச செயலகங்கள் நடவடிக்கை எடுப்பது காலத்தின் உடனடித் தேவையாகும்.

# தமிழர்களின் உரிமைகளை பறித்துவிட்டு நல்லிணக்கத்தை எவ்வாறு ஏற்படுத்த முடியும்?

## அநுரகுமார கேள்வி

(கொழும்பு)

**வடக்கு - கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தமிழ் மக்கள் அமைதியாகவே நடத்துகின்றனர். ஆகவே நினைவேந்தலுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவது அடிப்படை மனித உரிமை மீறலாகும் என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

தமிழினத்தால் 'தியாக தீபம்' என்று போற்றப்படும் திலீபனை வடக்கு, கிழக்கில் பகிரங்கமாக நினைவேந்தியவர்களை உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டுமென்று முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

"அடிப்படை அரசியல் அறிவு அற்றவர்களே இதற்கு எதிராகக் கண்டனங்களை வெளியிடுகின்றனர்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தால் தமிழர்களுக்கான உரிமைகளையும் தீர்வுகளையும் வழங்கியே தீரும்.

தமிழரின் உரிமையைப் பறித்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இங்கு போரிலோ அல்லது வேறு எந்தச் சந்தர்ப்பத்திலோ உயிரிழந்தவர்களை அவர்களின் உறவுகள் அல்லது அவர்களின் இனத்தவர்கள் அமைதியாக நினைவேந்த முடியும்.

இதற்கு எதிராக எவரும் கருத்துக்களை வெளியிட முடியாது. தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமையைப் பறித்துவிட்டு நாட்டில் எப்படி நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்? மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரச தரப்பினரும் அதன் நேர்வழி, மறைவழி பங்காளிகளும் இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தியே வந்தார்கள்.

தமிழ் மக்களுக்கான உரிமைகளையும் தீர்வுகளையும் வழங்க எந்த அரசும் முன்வரவில்லை. இந்த நாட்டில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தால் தமிழர்களுக்கான உரிமைகளையும், தீர்வுகளையும் வழங்கியே தீரும்" எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## பொருளாதார நெருக்கடியால் ஆடைத்தொழில் வீழ்ச்சி

(கொழும்பு)

நான்காவது காலாண்டில் ஆடைகள் மற்றும் தொழிற்றுறை ஏற்றுமதியில் வீழ்ச்சி ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக சுதந்திர வர்த்தக வலய முதலீட்டாளர்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியே இதற்கு பிரதான காரணம் என அந்த சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தம்மிக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் சுதந்திர வர்த்தக வலயத்தில் அமையப் பெறாத சிறிய மற்றும் நடுத்தர ஆடைத்தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்றுறை ஏற்றுமதி நிறுவனங்கள் பல மூடப்பட்டுள்ளன.

இதற்கமைய 15 நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் சில நிறுவனங்கள் உற்பத்தியை கைவிட்டுள்ளதாகவும் சுதந்திர வர்த்தக வலய முதலீட்டாளர்களின் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தம்மிக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (நி)

## திரிபோஷா குறித்து இனி அச்சம் தேவையில்லை

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

Aflatoxin அடங்கியுள்ள திரிபோஷா அழிக்கப்பட்டுள்ளதனால், அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள திரிபோஷா தொடர்பாக எந்தவித சந்தேகமும் இன்றி அதனைப் பயன்படுத்த முடியும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

திரிபோஷா குறித்து தேவையற்ற அச்சத்தை கொண்டிருக்க வேண்டாம் என்றும் இது தொடர்பான உண்மைக்கு புறம்பான தகவல்கள் வெளியிடப்படுவதாகவும் குடும்ப சுகாதார சேவை அலுவலகத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

Aflatoxin அடங்கியிருப்பதாக பரிசோதனையின் மூலம் உறுதி செய்யப்பட்ட திரிபோஷா பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக சிகிச்சை சேவை நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள திரிபோஷாவை பயன்படுத்த முடியும் என்றும் பணிப்பாளர் தெரிவித்தார். (நி)

## ராஜனி திராணகம ஞாபகார்த்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

1989 செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி படு கொலை செய்யப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உடற்கூற்றியல் துறையின் விரிவுரையாளர் அமரர். கலாநிதி ராஜனி திராணகமவின் மறைவினது 33 ஆவது வருட ஞாபகார்த்த நிகழ்வும் "மக்கள் இறைமையும் மக்கள் சபைகளும்" என்ற கருப் பொருளிலான ஒரு பட்டறையும் நாளை 01 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மணிக் கூட்டுக் கோபுரத்துக்கு அருகே இருக்கும் ரிம்மர் மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ராஜனி திராணகம ஞாபகார்த்தக் குழுவினரும், சகவாழ்வுக்கான யாழ்ப்பாண மக்களின் ஒன்றியமும் இணைந்து ஏற்பாடு செய்யும்

## சமூக ஆய்வுகளை பகிரும் வட்டமேசை மாநாடு

(நெளுக்குளம்)

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினரின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தன்னார்வ தொண்டர்களினால் மேற்கொள்ளப்பட்ட சமூகமட்ட ஆய்வுகளை பங்குதாரர்களுடன் சேர்ந்து பகிர்ந்து கொண்டு ஆதரித்து வாதாடும் வட்ட மேசை மாநாட்டு நிகழ்வு ஒன்று இன்று யாழ்ப்பாணம் tillco hotel இல் காலை 9.30 இற்கு இடம்பெறவுள்ளது. (4-299)

இந்த நிகழ்விலே, மனித உரிமை ஆர்வலர்கள், பெண்ணியச் செயற்பாட்டாளர்கள், சமூக நீதிச் செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கவாதிகள், மாணவர்கள், பெண்கள், பொது மக்கள் என அனைவரினையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண நடமாடும் சேவை முல்லைத்தீவில் முன்னெடுப்பு



(கண்டாவளை)

மக்களுக்கு ஒரே நாளில் பல்துறையில் சேவைகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் வடக்கு மாகாண நடமாடும் சேவை நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட வெலி ஓயா பிரதேச செயலக பிரிவில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணிவரை நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவையில் மாகாண சுகாதார திணைக்களம், மாகாண கல்வித் திணைக்களம், மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம், மாகாண விவசாயத் திணைக்களம், மாகாண சமூக சேவைகள் திணைக்களம், பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், சமுர்த்தி திணைக்கள்ம், சிறு கைத்தொழில் பிரிவு, மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை முதலிய திணைக்களங்களினூடாக வெலிஓயா பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்கள் ஒரே நாளில் சிறந்த நன்மைகளைப் பெற்றார்கள். (4-315)

# காட்டு விலங்குகளை வேட்டையாடிய இருவர் கைது

(கண்டாவளை)

கிளிநொச்சி முறிகண்டி காட்டுப் பகுதியில் காட்டு விலங்குகளை வேட்டையாடிய குற்றச்சாட்டில் இரண்டு பேர் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் மாலை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் முழுமையான விசாரணைகளுக்காக எதிர்வரும் நவம்பர் மாதம் 24 ஆம் திகதி தவணை இடப்பட்டுள்ளது. (4-315)

# மணல் ஏல விற்பனை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட மணல் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற வழக்குகளுடன் தொடர்புபட்டு அரசுடைமை யாக்கப்பட்ட மணல் இன்று 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதாக நீதிவான் நீதிமன்ற பதிவாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-315)

# சிறுவர் தின நிகழ்வு

(குப்பிழான்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச முன்பள்ளியின் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி முன்பள்ளி முன்றலில் புன்னாலைக் கட்டுவன் தெற்கு கணேசா சனசமூக நிலையத் தலைவர் சி.செல்வஸ்கந்தராஜா தலைமையில் ஆரம்பமாகி இடம்பெற உள்ளது.

நிகழ்வில் புன்னாலைக் கட்டுவன் மகா வித்தியாலய அதிபர் க.முரளிதரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ள உள்ளார். (4-18)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## 36வது பொதுப்பட்டமளிப்பு வைபவம் (பகுதி I)-2022

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36வது பொதுப்பட்டமளிப்பு வைபவம் (பகுதி I) ஐப்பசி மாதம் 6ம், 7ம் மற்றும் 8ம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் 8 அமர்வுகளாக நடைபெறும்.**

இப்பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறுவோருக்கு கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவேட்டறையில் (Record Room) வழங்கப்படும். பட்டமளிப்பு வைபவத்திற்கான அங்கிகளைப் பெற்றுக்கொள்ளும்போது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடியதான பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையினைக் காண்பித்தல் வேண்டும்.

பட்டமளிப்பு விழாவின்போது புகைப்படம் எடுப்பதற்கான சகல ஒழுங்குகளும் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பட்டதாரிகள் தமக்குரிய பட்டமளிப்பு அமர்வு விபரங்களையும், ஏனைய பட்டமளிப்பு விழா தொடர்பான அறிவுறுத்தல்களையும் யாழ்ப்பாணப் பல்கல்லைக்கழக கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளையின் அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம். மேற்குறித்த விபரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். முகவரி: www.jfn.ac.lk

| திகதி | நேரம் | பட்டம் |
|---|---|---|
| 01.10.2022 (சனிக்கிழமை) | மு.ப. 10.30 -மதியம் 12.30<br>பி.ப. 02.00 -பி.ப. 05.00 | • வைத்தியமாணி மற்றும் சத்திரசிகிச்சை மாணி<br>• மருத்துவ விஞ்ஞானமாணி<br>• பொறியியலில் சிறப்பு விஞ்ஞானமாணி<br>• விஞ்ஞானமாணி (சிறப்பு)<br>• விஞ்ஞானமாணி (பொது)<br>• பிரயோக விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி<br>• கணனி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி<br>• கணனி விஞ்ஞானத்தில் இளமாணி |
| 02.10.2022 (ஞாயிற்றுக்கிழமை) | மு.ப. 09.00 - மதியம் 12.30<br>பி.ப. 02.00 - பி.ப. 05.00 | • கலாநிதி. முதுமெய்யியல்மாணி.<br>• முதுவிஞ்ஞானமாணி (சூழல் முகாமைத்துவம்)<br>• முது வியாபார நிர்வாகமாணி<br>• தாதியியலில் சிறப்பு விஞ்ஞானமாணி<br>• மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி<br>• மருந்தகவியல் சிறப்புமாணி<br>• பட்டப்பின் தகைமைச்சான்றிதழ் {கல்வியியல்-(பகுதி நேரம், முழு நேரம்) சுகாதார முகாமைத்துவம்}<br>• வியாபார நிர்வாகமாணி (சிறப்பு.பொது)<br>• வணிகமாணி (சிறப்பு, பொது) |
| 03.10.2022 (திங்கட்கிழமை) | மு. ப. 09.00 -மதியம் 12.30<br>பி. ப. 02.00 - பி.ப. 05.00 | • சிறப்புக் கலைமாணி (Honours degree)<br>• நுண்கலைமாணி (நடனம்.சங்கீதம், சித்திரமும் வடிவமைப்பும்) |
| 04.10.2022 (செவ்வாய்க்கிழமை) | மு.ப. 09.00 - மதியம் 12.30<br>பி.ப. 02.00 - பி.ப. 05.00 | • கலைமாணி (பொது)<br>• கலைமாணி (சிறப்பு)<br>• மொழிபெயர்ப்புக் கற்கைகளில் சிறப்புக் கலைமாணி<br>• சட்டமாணி<br>• விவசாயத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி<br>• பொறியியலில் சிறப்பு தொழில்நுட்பமாணி<br>• உயிர்முறைமைகளில் சிறப்பு தொழில்நுட்பமாணி<br>**தொலைக்கல்வி**<br>• வியாபார முகாமைத்துவமாணி<br>• வணிகமாணி (சிறப்பு, பொது) |

**குறிப்பு:**

1) பட்டதாரி மாணவர்கள் கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளையினால் வழங்கப்படும் தொழில் பெறு இயலுமைக்கான கேள்விக் கொத்தினைப் பெற்று, முறையாகப் பூரணப்படுத்தி பட்டமளிப்பு அங்கிகளைப் பெறுவதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

2) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் வவுனியா வளாகத்தின் பட்டதாரிகள் தங்களது பட்ட அங்கிகளை 03.10.2022(திங்கட்கிழமை) தொடக்கம் வவுனியாப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**(தொலைபேசி இல:024-222-3317)** மின்னஞ்சல்முகவரி: dr.exams@vau.ac.lk

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 300 | 300 | 250 |
| உருளைக்கிழங்கு | 250 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 300 | 300 |
| தக்காளி | 250 | 350 | 220 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 280 | 280 | 240 |
| கோவா | 320 | 400 | 450 | 450 |
| கரட் | 300 | 390 | 400 | 450 |
| பூசணி | 200 | 140 | 160 | 200 |
| புடோல் | 240 | 320 | 200 | 200 |
| வாழைக்காய் | 250 | 160 | 150 | 150 |
| சின்னவெங்காயம் | 350 | 350 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 160 | 200 |
| பாகற்காய் | 800 | 800 | 700 | 600 |
| வெண்டக்காய் | 180 | 200 | 150 | 250 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 200 | 250 |
| பயற்றங்காய் | 300 | 250 | 300 | 240 |
| லீக்ஸ் | 280 | 300 | 260 | 320 |
| பீற்றூட் | 260 | 250 | 200 | 350 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 450 | 400 | 600 |
| போஞ்சி | 400 | 400 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 200 | 240 |
| கீரை - 1 பிடி | 150 | 80 | 150 | 120 |
| தேசிக்காய் | 350 | 350 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 400 | 400 |
| முள்ளங்கி | 120 | 200 | 160 | 280 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 70 | 80 |
| வல்லாரை | 30 | 20 | 40 | 60 |
| ஈரப்பலா | 160 | 150 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

னியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் மரணமடைந்தார்.

தாலிக்குளம் பகுதியைச் சேர்ந்த ராஜகோபால் (வயது 68) என்ற வயோதிபரே மரணமடைந்தார். மோட்டார் சைக்கிளைச் செலுத்திய மற்றைய இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-7)

## ஆண் ஒருவரின்...

தூக்கிட்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மீசாலை வடக்கு கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 45வயதான இளம் குடும்பஸ்தர் ஒருவருடைய சடலமே இவ்வாறு தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரது சடலம் வியாழக்கிழமை காலை மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7.30)

## இலங்கைக்கு...

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுக்குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர் மற்றும் இலங்கை தலைவர் மசாஹிரோ நோசாகி ஆகியோர் நிக்கி ஏஷியா (Nikkei Asia) இணையத்தளத்திற்கு எழுதியுள்ள கடிதத்தில் இலங்கைக்கான கடன் தொடர்பில் விளக்களித்துள்ளனர்.

அதில், கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளுக்கு நேரம் எடுப்பதால், நிதியை வழங்கும் காலக்கெடுவை எதிர்வு கூறுவது மிகவும் கடினம். சம்பந்தப்பட்ட தரப்பினர் பேச்சுவார்த்தைகளை விரைவுபடுத்த வேண்டும். அப்போதுதான், எதிர்கொள்ளும் நெருக்கடியிலிருந்து இலங்கை விரைவாக வெளியேற முடியும் என தெரிவித்துள்ளனர். (ம-7)

## இலங்கைக்கான...

ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும் சுமார் 700 புலமைப்பரிசில்கள் தவிர, இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களுக்கிடையில் கூட்டாண்மை மூலம் உயர்கல்வி உட்பட கல்வித் துறையில் இலங்கைக்கு உதவுவதற்கான முயற்சியை இதன்போது உயர்ஸ்தானிகர் எடுத்துரைத்தார். (ம-7)

## தளர்த்த தீர்மா...

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படலாம் அல்லது அத்தியாவசியமானவை அல்ல என்ற அடிப்படையில் குறித்த பொருட்களுக்கு இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு மிகக் குறைந்த அளவில் உள்ள நிலையில் எரிவாயு, எண்ணெய், மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய பணம் தேவைப்படுகிறது. எனவே அரசாங்கம் முன்னுரிமை பட்டியலை உருவாக்க விரும்புவதாக சியம்பலாப்பிட்டிய குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே இலங்கை வர்த்தக சபை உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களின் கோரிக்கைகளை கருத்தில் கொண்டு, 708 பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

இந்தநிலையில் எதிர்காலத்தில் இறக்குமதி கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார். (ம-7)

## 1.5 மில்லியன்...

மக்களுக்கு உதவுவதற்கென 1.5 மில்லியன் யூரோ நிதியுதவியை இலங்கைக்கு வழங்குவதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

இந்நிதியுதவியானது விசேடமாக நாட்டுமக்கள் எதிர்கொண்டிருக்கும் உணவு, சுகாதாரம், கல்வி மற்றும் பாதுகாப்புசார் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குப் பயன்படுத்தப்படும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதனூடாக தற்போதைய பொருளாதார நெருக்கடியின் விளைவாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மற்றும் அவசர மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் நிலையிலுள்ள வறிய மற்றும் பின்தங்கிய குடும்பங்களுக்கு அவசியமான உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-7)

## பொருளாதாரம்...

பிரேமஜயந்த, ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

அசங்க நவரத்ன, ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன், மனோகணேசன், பழனி திகாம்பரம், ஜீவன் தொண்டமான், சிசிர ஜயக்கொடி, நாமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சாகர காரியவசம், அலி சப்ரி ரஹீம், ரோஹித்த அபேகுணவர்தன, வஜிர அபேவர்தன, டிரான் அலஸ், சிவநேசத்துரை சந்திரகாந்தன், சம்பிக்க ரணவக்க ஆகியோரும் நேற்றைய கூட்டத்தில் பங்கேற்றனர். தேசிய சபையின் உறுப்பினர்களான C.V.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், A.L.M. அதாவுல்லா, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

தேசிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, விமல் வீரவன்ச தலைமையிலான மேலவை இலங்கை கூட்டணி ஆகியவற்றின் உறுப்பினர்கள் தேசிய சபையில் பங்கேற்கப்போவதில்லை என ஏற்கனவே அறிவித்திருந்தனர். டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபைக்கும் தேசிய சபை பிரதிநிதித்துவத்திற்காக அழைப்பு விடுக்கப்படவில்லை. (ம-7)

## அரசாங்கத்திற்கு...

போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தப் போராட்டம் கொழும்பு கொம்பனி தெருவில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹுமான் தலைமையில் இடம்பெற்றது.

இந்த போராட்டத்தில் கொம்பனி தெரு மக்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-7)

## உலக...

இவ் வாறான நிலையிலும் எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி மக்களுக்காக பல பணிகளை செய்துள்ளதாகவும் அதற்கு சக்வாலா மற்றும் காஸா திட்டங்கள் சிறந்த எடுத்துக்காட்டு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பொரு...

மசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகளாவிய அரசியல் போக்குகள் பொருளாதார நெருக்கடியை மேலும் மோசமாக்கியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பிலிப் பைன்ஸின் மணிலா நகரிலுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைமையகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர்களின் 55 ஆவது வருடாந்த கூட்டத்தின் பிரதான அமர்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில்,

உணவு மற்றும் எரிபொருள் விலைகளின் அதிகரிப்பு நடுத்தர வர்க்கத்தினரின் வளர்ச்சியை குறைத்துள்ளதுடன், இந்து சமுத்திர பிராந்திய நாடுகளில் வசிக்கும் நடுத்தர குடும்பங்களின் வாழ்க்கை முறையில் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பெரும் பொருளாதார அழுத்தங்களுக்கு மத்தியில், நாட்டின் கடன் நிலைத்தன்மையை மீளமைப்பதற்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் இலங்கை முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. மேலும் கடனை நிலைநிறுத்துவதற்கான இந்த முயற்சிகளுக்கு அனைத்து தரப்பினரும் ஆதரவளிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

இந்த ஆழமான மற்றும் அழுத்தமான மறுசீரமைப்புகளை மேற்கொள்ளும் அதே வேளை சமூகத்தில் அதிகம் பாதிக்கப்படக்கூடிய தரப்பினர் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. அதற்கேற்ப சமூகப் பாதுகாப்பிற்கு அதிக நிதி மற்றும் வளங்களை ஒதுக்குவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2022/09/29
சீட்டிழுப்பு இலக்கம் 4893
G 3 2 8 8 7 8
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன
சீட்டிழுப்பு திகதி 2022.09.29
சீட்டிழுப்பு இலக்கம் 202
விருச்சிகம் 06 18 31 52 விருச்சிகம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 29/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1241
E 22 47 65 68 70

கொவிசெத
திகதி 2022.09.29
சீட்டிழுப்பு இலக்கம் 3135
O 03 21 47 70
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.09.29
சீட்டிழுப்பு இலக்கம் - 923
K 24 37 60 80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 29/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1348
மிதுனம் 3 5 3 1 1 7
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1694
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.09.29
ரூ. 3,499,660/-
05 15 21 74 A

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.09.29
சீட்டிழுப்பு இல: 4029
வர்ணம்: சிவப்பு
ரூ. 4,110,860/-
17 28 30 40 G

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,170,280/-
திகதி 2022-09-29
வெற்றி வாரம் 3580
வர்ணம் கபிலம்
08 16 31 35
ரூ. 8,669,740/-

26 வசனா
சீட்டிழுப்பு வாரம் 1044
வர்ணம் செம்மஞ்சள்
2022.09.29 வியாழக்கிழமை
E 36 18 30 36 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 265,767,359.80
67070 13539

சுவர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 531
திகதி 2022-09-29
வர்ணம் நீலம்
W 07 26 66 01
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 12,963,328/-
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1868
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.09.29
தினம் வியாழக்கிழமை
F 15 28 59 61
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத்தொகை ரூ. 2,581,200/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பு

**A/L இரசாயனம்,**
**O/L கணிதம்**
கற்பிக்கப்படும்.
**071 257 9018**
(12918)

# சிறுநீரகம் தேவை

O இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. (35-45 வயதுக்கு உட்பட்டவர்கள்) தொடர்புகொள்ளவும்.
**077 076 0383**
(12947)

# தேவை

வட மாகாணத்தில் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் உணவகத் தொடர் (Restaurant Chain) இற்கு கீழ் குறித்த இடங்களில் 2 பரப்பு வெற்றுக் காணி/ தகுந்த கட்டடத் தொகுதி/ வீடுகள் நீண்டகால குத்தகைக்கு or விற்பனைக்கு தேவை.
**( யாழ்ப்பாணம், பருத்தித்துறை, நெல்லியடி, கொடிகாமம், சாவகச்சேரி, காங்கேசன்துறை, மானிப்பாய், சங்கானை, பளை, கிளிநொச்சி, பரந்தன், பூநகரி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு இரணைமடு, மன்னார் )**
(12938)
**074 090 5117**
**077 725 1036**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில்**
**4 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நான்கு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி முகப்புடன் (காபற் வீதி)
- 784 இலக்க போக்குவரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி
- பொன்னாலை ரவுண்டப்போட் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (Jaffna College) இருந்து 1 km தூரத்தில்
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12924)
தொடர்புகளுக்கு:- **077 288 0152**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடியில்**
**15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50M தூரம்)
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடிச் சந்தியிலிருந்து 500M தூரத்தில்
- 18 அடிப் பாதையுடன் நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம்
- வீடுகள், திருமண மண்டபம் அமைக்க உகந்த சூழல்
- ஒரு பரப்பின் விலை பத்து இலட்சம் (100,0000/-) மட்டும்
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் - காலை 9 மணி முதல் மாலை 6 வரை

(12924)
**077 658 5999**

# நலத்திட்ட உதவிக்கான காலஎல்லை நீடிப்பு

நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் கால எல்லை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வழங்கப்பட்ட கால அவகாசம் ஒக்ரோபர் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கு விண்ணப்பிக்கும் அனைத்து நபர்களும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து அந்தந்த பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# காணி விற்பனைக்கு

சுன்னாகத்திலிருந்து புன்னாலைக்கட்டுவன் செல்லும் பிரதான வீதியில் 2 ஆம் காணி 6 பரப்பு (2 பரப்பாக பிரித்தும் கொடுக்கப்படும்) மயிலனி செல்லும் பிரதான காபட் வீதியோரம் காணி விற்பனைக்கு உண்டு.
**077 538 4132**
**070 617 2892**
(12937)

# ANNAI MUTHTHUMARI

(Village Hotel)

COLOMBO ⇌ JAFFNA ⇌ VALVETITHURAI

Starting From
**OCT - 1**

**RS.3000**
Only For Direct Booking

BOOKING NUMBER
**077 544 8503, 077 077 7775**




(12944)

# காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்கள், பிள்ளைகளின் யாதகக் குறிப்புகள், அவர்களின் பலன்களும் துல்லியமாக கணித்து பெற்றுக் கொள்ளலாம். திருமணத்திற்கு வெளிநாடு செல்ல விரும்பும் மணமக்கள் உடனடியாக தேவை. எல்லா வயதினரும் தொடர்பு கொள்ளவும்.

**காயத்திரி திருமண சேவை**
தொடர்புகளுக்கு (உரும்பிராய்)
**076 835 1932 / 021 223 2222**
வெளிநாட்டு திருமணத் தொடர்புகளுக்கு
**Wahlen STR - 143 - 4242 Laufen, Swiss**
**Tel: 0041768185443 Whatsapp இல் மட்டும்**
(12936)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை நடராசா

**(முன்னாள் உரிமையாளர் - சிங்கம் பீடா ஸ்ரோர்ஸ், காங்கேசன்துறை)**

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 29.05.1937 | 29.09.2022 |



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நடராசா அவர்கள் நேற்று (29.09.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற கைலாம்பிகையின் (ராணி) அன்புக் கணவரும் முத்தையா - மீனாட்சி தம்பதியரின் மருமகனும் கவிதா (ஆசிரியர் - யா/அருணோதயக் கல்லூரி), விஜிதா, சிவரூபன் (உரிமையாளர் - Rajarani Electrical and Hardware, Mallakam), ஜெயரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - நானாட்டான் பிரதேச சபை, மன்னார்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயானந்தன் (மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்), சுலக்ஷினி (ஆசிரியர் - யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் கேனிசா, சயானி ஆகியோரின் பாசமிகு பேரனும் தவமணி (கனடா), காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், குணசிங்கம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.09.2022) வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
(021 205 9073, 077 654 4521)
(C-5001)

# கணித பாட ஆசிரியர் தேவை

தரம் 6-11 வரையான வகுப்புகளுக்கு கற்பிக்கக்கூடிய புதிய கல்வி நிலையம் ஒன்றுக்காக ஆசிரியர் தேவை.
இடம் - தெல்லிப்பளை
(12935)
**077 834 3666**

# வீடு வாடகைக்கு

கிளிநொச்சி திருநகரில் மாவட்ட செயலகத்திற்கு அருகில் சிறிய குடும்பம் வசிக்கக்கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு
(C-5000)
**076 231 2403**

# மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதான 2 இல் செவ்வாய் உள்ள உயர் வருமானம் பெறும் நற்குணமுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் விரும்பப்படவில்லை.
(12943)
**074 375 2030**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**01.10.2022**

**வங்கியியல் கற்கைநெறிகள்**
**Banking Courses**
**IABF & DABF**
(Tamil & English Medium)
Qualification:- G.C.E O/L
6 Passes with 5
Credits including Maths.

**கணக்காளர் கற்கைநெறிகள்**
**Chartered Accounting Courses**
Business level - I, II
(Tamil & English Medium)
Qualification:- G.C.E A/L 3 Passes.

**தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு**
**aat (Sri Lanka)**
**AA1, AA2, AA3)**
Qualification:- G.C.E O/L 6 Passes
Medium - Tamil & English

**G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்**
**Certificate Course in English**
20 Batches have successfully Completed the Course

Further Details: **Jaffna College**
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382, 021 222 9149
077 440 5917
(C-4999)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org